**செய்தி வெளியீடு எண்: 736** **நாள்: 09.12.2011**

## பத்திரிக்கைச் செய்தி

புதிய குடும்ப அட்டைகள் பெறுதல், மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்டம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன் படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சென்னை 16 மண்டல பகுதி மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிட்டுள்ள இடங்களில் டிசம்பர் 2011 மாதத்திற்கான மாதாந்திர குறைதீர் கூட்டம் 10.12.2011 அன்று காலை 10.00 மணிக்கு நடத்தப்பட உள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி வாழும் பொது மக்களின் புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 16 மண்டல பகுதி வாழ் பொது மக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | மண்டலம் | கூட்டம் நடக்கவிருக்கும் இடம் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | ஸ்ரீ ராமகிருஷ்ணா மடம்<br>விவேகானந்தா சென்சுரி மகளீர் மேல்நிலைப்பள்ளி,<br>புதிய எண்.2, பழைய எண் 16, சரவணமுதலி தெரு, சென்னை – 79 |
| 2 | இராயபுரம் | BCS ஜெயின் மெட்ரிக்குலேஷன்<br>ஹையர் செகண்டரி ஸ்கூல், எண் 14, ராமானுஜ அய்யர் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 21 |
| 3 | பெரம்பூர் | சென்னை நடுநிலைப்பள்ளி,<br>கபிலர் தெரு, மடுமா நகர், சென்னை–11.<br>(டான்பாஸ்கோ உயர்நிலைப்பள்ளி எதிரில்) |
| 4 | அண்ணா நகர் | சென்னை மாநகராட்சி அலுவலகம்,<br>13 எம்.ஜி.ஆர் 3வது தெரு, எம் எம் டி ஏ காலனி, சென்னை–106.<br>(எம் எம் டி ஏ காவல் நிலையம் அருகில்) |

| | | |
|---|---|---|
| 5 | அம்பத்தூர் | அம்பத்தூர் நகராட்சி உயர் நிலைப்பள்ளி (North Railway Station Road ) அக்ரஹாரம், கொரட்டூர், சென்னை – 76. |
| 6 | வில்லிவாக்கம் | மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, எண்.22/2, சிவன் கோயில் தெரு, வடக்கு மாட வீதி, வில்லிவாக்கம், சென்னை– 49. |
| 7 | திருவொற்றியூர் | சென்னை மேல்நிலைப்பள்ளி, படேல் நகர் 4வது தெரு, தண்டையார்பேட்டை, சென்னை –8 |
| 8 | ஆவடி | புனித அந்தோணியார் நடுநிலைப்பள்ளி, காந்தி நகர், ஆவடி (சர்ச் ஸ்கூல்) சென்னை – 84. |
| 9 | தி.நகர் | ஸ்ரீ ராமகிருஷ்ணா மிஷன், சாரதா வித்யாலயா மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி, எண்.1 மேட்லி ரோடு 2வது தெரு, தி.நகர், சென்னை – 17. |
| 10 | மயிலாப்பூர் | உதவி செயற்பொறியாளர் அலுவலகம், மண்டலம் –13 எண்.2, 8–வது கிழக்கு தெரு, காமராஜ் நகர், தரமணி பகுதி, திருவான்மியூர், சென்ன்ன –41. |
| 11 | பரங்கிமலை | பல்லாவரம் நகராட்சி துவக்கப்பள்ளி G.S.T ரோடு ( பல்லாவரம் சிக்னல் அருகில்) ஈசா பல்லாவரம், சென்னை–43. |
| 12 | தாம்பரம் | சந்தோசபுரம் பூங்கா, வேங்கைவாசல் முதன்மைச் சாலை, வேங்கை வாசல், சென்னை–73. |
| 13 | சைதாப்பேட்டை | சென்னை மாநகரட்சி நடுநிலைப்பள்ளி, 2 புதுத்தெரு, கோட்டூர், சென்னை– 85. |
| 14 | ஆயிரம் விளக்கு | சென்னை மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி, 4–ஸ்ட்ராஹன்ஸ் ரோடு, பட்டாளம், சென்னை–12. |
| 15 | சேப்பாக்கம் | சென்னை மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி, வல்லப அக்ரஹாரம் தெரு, சென்னை–5. |
| 16 | சோழங்கநல்லூர் | ஆதிபராசக்தி கல்யாண மண்டபம், எண்.6, அண்ணாநெடுஞ்சாலை, கந்தன்சாவடி, சென்னை–96. (மேனுவல் மோனி மெட்ரிக்குலேசன் ஹையர் செகண்டரி மேல்நிலைப்பள்ளி) |

**ஆணையாளருக்காக.**

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**